முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

154—

நியாய விலைக் கடை

***18368—திரு. சு. ரவி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வளர்புரம் ஆதி திராவிடர் காலனி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வளர்புரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வளர்புரம்-I நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடை, வளர்புரம் ஆதி திராவிடர் காலனிப் பகுதியில் உள்ள 239 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, மொத்தம் 474 குடும்ப அட்டைகளோடு முழுநேரக் கடையாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், தாய்க் கடைக்கும், உத்தேச பகுதி நேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு கிலோ மீட்டர்தான். பகுதிநேரக் கடை கோரும் ஆதி திராவிடர் காலனிப் பகுதியிலுள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்தால், தாய்க் கடையில் 235 குடும்ப அட்டைகளே எஞ்சி இருக்கின்றன. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், வளர்புரம் ஆதி திராவிடர் காலனிப்

பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. ரவி அவர்கள்.*

திரு. க. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வளர்புரம் ஆதி திராவிடர் காலனியில் 230 தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள் வசித்து வருகிறார்கள். அந்த ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள் காலங்காலமாக கிட்டத்தட்ட ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தாயுறுப்பேட்டை நியாய விலைக் கடை எண் 1-ல் அரசு வழங்குகிற நுகர்பொருட்களை வாங்கி வருகிறார்கள். அந்த நியாய விலைக் கடை தூரத்தில் உள்ளதால், பெண்களும், முதியோர்களும் நடந்துசென்று பொருட்களை வாங்கி வர மிகவும் சிரமப்படுகிறார்கள்; பெண்கள் வெகுதூரம் சென்று வர அச்சப்படுகிறார்கள்; மழைக்காலங்களில் செல்ல முடியாமலும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை, அந்தப் பகுதியிலே ஒரு நியாய விலைக் கடையை அமைக்க வேண்டுமென்பதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது விதிகளில் இடம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிறைவேற்ற முடியாத திட்டமே இல்லை. எனவே, மக்களுடைய தேவைகளை அறிந்து வாரி வழங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆதி திராவிட மக்கள் வாழும் வளர்புரம் காலனியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நியாய விலைக் கடைக்கும் மற்றொரு கடைக்கும் குறைந்தது ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அவர்கள் குறிப்பிடுகிற நியாய விலைக் கடைகளுக்கு இடையே இருக்கும் தூரம் 1 கிலோ மீட்டர்தான். மேலும், ஒரு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். ஆனால், அந்த நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு 335 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன. [இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதி திராவிடர் காலனி என்று கூறுவதனால் பரிசீலிக்கலாம்.]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே 4 நியாய விலைக் கடைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 3 பகுதிநேரக் கடைகளும் ஒரு முழு நேரக் கடையும் அடங்கும். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வளர்புரம் ஆதி திராவிடர் காலனி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்கக் கேட்டிருக்கிறார்கள்.

ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால், பொதுவாக அந்தப் பகுதியில் வாழும் உள்ளூர் மக்களே அதற்கான கட்டடத்தை இலவசமாகக் கொடுக்கவேண்டும். இரண்டாவதாக, அங்கு கொண்டு செல்லப்படுகிற பொருட்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது விதி. ஏனென்றால், இந்தக் கடையைக் கூட்டுறவுச் சங்கங்கள்தான் நடத்துகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு எத்தகைய நிதிநிலை ஆதாரத்தில் செயல்படுகின்றன என்பது அனைவருக்கும் தெரியும். வளர்புரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தளவில், 10 கடைகளை நடத்துகிறது. அவற்றில் 4 பகுதி நேர நியாய விலைக் கடைகள், 6 முழுநேர நியாய விலைக் கடைகள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அப்பகுதியில் இலவசமாகக் கட்டடம் கிடைக்கும்பட்சத்தில், இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க, அந்தப் பகுதி மக்கள் வாடகை இல்லாத கட்டடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அங்கே நியாய விலைக் கடையைக் கட்டுவதற்கு இடமும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துக் கொடுத்தால், நியாய விலைக் கடைக்கான கட்டடம் கட்டுவதற்கு என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்துகூட நிதியை ஒதுக்கித் தருகிறேன் என்று இந்த அவையிலே நான் உறுதி அளிக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய தன்னிகரில்லா தலைவியான அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதிக்கு எப்போது நியாய விலைக் கடையை அமைத்துத் தருவார்கள் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலில் இந்த மன்றத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அவருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 11 நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார். அதற்கு முதலில் நன்றி. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த மாதிரி செய்தால் ரொம்ப சந்தோஷம். (குறுக்கீடு) மகிழ்ச்சி என்றுதான் நான் சொல்கிறேன். இந்த மாதிரி எல்லோரும் கட்டிக் கொடுக்க முன்வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் அவர் நியாய விலைக் கடைக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்தவுடன், இந்த மாதத்திலேகூட முடித்துக் கொடுப்பதற்கு துறை ரீதியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, காடாம்புலியூர் கிராமம், ஆதி திராவிடர்கள் வாழுகின்ற காந்தி நகரில் 180 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. மேலும், தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பகுதிக்கு ஒரு புதிய பகுதிநேரக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையில் கூறியதைப்போல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள்தான் இந்த நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. இந்தச் சங்கங்களை நடத்துவதற்கு நிதியாதாரம் தேவைப்படுகிறது. அரசினுடைய விதியை மீறி கொடுக்கின்றபட்சத்தில், சங்கத்தினுடைய நிதியாதாரம் மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, பணியாளர்களின் ஊதிய உயர்வு, கடை வாடகை, மின்சாரக் கட்டணம், வாகக் கடன் வட்டி, போக்குவரத்துக் கட்டணம், காப்பீடு கட்டணம், புத்தகம் பராமரித்தல், எடைக் கல் மற்றும் தராசு முத்திரைக் கட்டணம் என்று பல்வேறு கட்டணங்களை அந்தச் சங்கங்கள் ஏற்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்த பிறகு, நியாயமான கோரிக்கைகளாக இருக்கும்பட்சத்தில், கடந்த மூன்று ஆண்டுகளில், கூட்டுறவுத் துறை*

முறையாக 428 முழுநேரக் கடைகளும், 861 பகுதிநேரக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் நியாய விலைக் கடை திறக்க வேண்டுமென்று கோருகிறார். அவசியம் ஏற்படுமானால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரே அந்த இடத்தினுடைய சூழ்நிலையைக் கருதி, அந்தக் கடையைத் திறந்து கொடுப்பதற்கு வாய்ப்பும், வசதிகளும் சட்டத்தில் இடமும் இருக்கின்றது. அதாவது, பழங்குடியினர் நலன் மற்றும் இன மோதல்களால் சட்டம்-ஒழுங்கு பாதிக்கக்கூடும் என்ற சூழ்நிலை இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரே சூழ்நிலைக்கேற்றவாறு புதிய நியாய விலைக் கடை அல்லது பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறக்கலாம். அதேநேரத்தில், மேற்படி நிபந்தனைகள் பூர்த்தியாகாத சூழ்நிலையில், நம்முடைய மாநில உணவுப்பொருள் துறை ஆணையாளர்மூலம் முன்மொழிவு பெற்று, அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, அவருடைய கோரிக்கையைக் கருதும்பட்சத்தில், அந்தக் கடையைத் திறப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா; மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

155—

தொழில் மையம்

*24007—திரு. டி.ஆர்.பி. ராஜா:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர்ப் பகுதியில் சிப்காட் தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?